# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய (திருத்தச்) சட்டம்

---

*[1987, மே மாதம் 21 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, மே மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய (திருத்தச்) சட்டம்

[1987, மே மாதம் 21 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 41/86

**1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தில் 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தில் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன், இது அச்சட்டத்தின் 7அ எனனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" துணை நிதியங்களைத் தாபித்தல்.

7அ. (1) அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான குறித்த நோக்கங்களுக்கான அத்தகைய எண்ணிக்கையிலான துணைநிதி நிதியங்கள் நிதியத்தின்கீழ் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் குறித்த கருத்திட்டத்தை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கையிலும் வெளிநாட்டிலுமான தனியாட்களிடமிருந்து, குழுமங்களிடமிருந்து, அல்லது நிறுவனங்களிடமிருந்து கொடையாக அல்லது நன்கொடையாக நிதியத்திற்குக் கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நோக்கத்திற்காகத் தாபிக்கப்படும் துணைநிதி நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அமைச்சரின் பணிப்புகளுக்கு அமைவாக, அந்நோக்கத்திற்கெனச் சபையால் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒவ்வொரு துணைநிதி நிதியம் தொடர்பிலும், அமைச்சரானவர், அத்தகைய துணைநிதி நிதியத்திலுள்ள பணங்களைப் பிரயோகித்தல் பற்றிச் சபைக்கு ஆலோசனை கூறுவதற்கு அவசியமெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஓர் ஆலோசனைக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

2—ஏ 095364—2,820 (02/87)

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவொன்றின் ஒவ்வோர் உறுப்பினருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".